

ஆசிரியர் மடல்

# இயேசுவே மெய்யான ஒளி

**அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு ,**

இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

வருடத்தின் கடைசி நாட்களில் வந்திருக்கிறோம்.இந்த பூமிக்குரிய இராஜ்யத்திற்கும் கடைசி நாட்களா..! காலம் சமீபித்திருக்கிறது.ஒருவர் கேட்டார் இப்போது நடக்கிற யுத்தத்தை குறித்து வருடத்தின் ஆரம்பத்திலே யாரும் தீர்க்கதரிசனமாக உரைக்கவில்லையே..என்று! நான்சொன்னேன் இப்போது நடக்கிற யுத்தத்தின் ஒவ்வொரு அசைவையும், செயல் முறையையும் 2300, 2500,2600 ஆண்டுகளுக்கு முன்னமே இந்த வேதபுத்தகம் தெளிவாய் தீர்க்கமாய் உரைத்திருக்கிறதே! எத்தனை பேருக்கு இது உரைத்திருக்கிறது! யாரோ ஒருவர் தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தால் மட்டும் இருதயத்திலே உரைத்து குத்தப்பட்டவர்களாய மனந்திரும்பியிருப்பார்களா! இல்லையே! அப்புறம் என்ன கேள்வி வேண்டி கிடக்கு? என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டேன்.

கவனியுங்கள், இப்போது எங்கு திரும்பினாலும்,எந்த *Media* வின் எந்த பக்கம் பார்த்தாலும். இஸ்ரவேல்,பாலஸ்தீனம், யூதர்கள்,காசா.அஸ்கலோன், அஸ்தோத், எபிரோன், ஜெருசலேம், என்ற வார்த்தைகள் இந்த பூமியின் குடிகளில் அநேகருக்கு அத்துப்படியாயிற்று. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவைகள் வேதத்திலிருக்கிறவைகள்தான். பாமர மக்கள் மத்தியிலும் பைபிளு, இயேசு என்ற வார்த்தைகளை உச்சரிக்கும்படியான நாட்கள் இதுவாயிருக்கிறது. உலகத்தின் முடிவு, இயேசுவின் வருகை என்று ஒருபக்கம் பெரிய அசைவுகள் இருந்தாலும் இன்னொரு பக்கம் நோவாவின் நாட்களில் வெள்ளம் வந்து வாரிக்கொண்டு போகும் வரை ஜனங்கள் உணராதிருந்தார்கள் என்ற வார்த்தைக்கேற்றபடியும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அருமையானவர்களே,எது எப்படியோ வேதத்திற்கு நேராக *( Bible )* மனக்கண்கள் திறக்கப்படுகிறவர்கள் அதிக பாக்கியவான்கள்.அற்பமானவர்களுக்கும் சரி, அம்பானிகளுக்கும் சரி,இன்று யாவருக்கும் இயேசு தேவை.**நாவுகள் யாவும் அறிக்கையிடும்.முழங்கால்கள் யாவும் முடங்கும்.**இது வேடிக்கை பார்க்கும் காலம் அல்ல,இது வழக்கமான வாடிக்கையும் அல்ல,எட்ட நின்று எட்டிப்பார்க்கும் கூட்டத்திலிருந்து வெளியே வந்து அல்லது விலகி நின்று, எட்டாத உயரத்திலிருக்கும் பரலோக இராஜ்யம் என்று நினையாமல்,இதோ ,தேவஇராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே என்ற வார்த்தையை எண்ணிப்பார்த்து கிட்ட வந்து,உங்களுக்கென்று ஆயத்தப்படுத்தியிருக்கிற ''**இரட்சிப்பை**'' சுதந்தரித்துக் கொள்ளுங்கள்.அப்படியென்றால் நான் தைரியமாக சொல்வேன் நீங்கள் புத்திசாலிகள் என்று.இது பதினோராம் மாதம் மட்டுமல்ல,இது பதினோராம் மணி வேளையாயிருக்கிறது.எச்சரிப்பின் மணி சத்தம் காதில் விழவில்லையா!

வாலிப உலகம் தறிகெட்டு போய் கொண்டிருக்கிறது.பிசாசு அவர்களின் தோள் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு சவாரி செய்கிறான்.இவர்களின் எதிர்காலம் பரிதாபமாயிருக்கிறது! இது என்னவாய் முடியும் என்ற பரிதவிப்பு. அறிவு பெருத்துபோய், ஆழம் தெரியாமல் கால்களை விட்டு படுகுழியில் விழுந்து கிடக்கிறது வாலிப உலகம்.பிசாசு *Media*வை சரியாக தன் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொருவரையும் பதம் பார்க்கிறான்.ஹீரோயிசம் வெறித்தனமாக இருக்கிறது. ஆம், இவைகளெல்லாம் கடைசி நாட்களின் அறிகுறிகள்.சபைகளும் உலகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறது. விழித்துக்கொள்கிறவன் பிழைத்துக்கொள்வான்.

**நெகேமியா**(ஆலயப் பணி) இரண்டாம் கட்ட *(Second Stage)* பணிகள் ஆரம்பித்து நடந்து **கொண்டிருக்கிறது.** *(See Pictures)* நின்று யோசித்தால் முற்றிலும் இயலாத காரியம்தான்.ஆரம்பித்து விட்டால் தேவன் யோசிக்க ஆரம்பிப்பார்.

இது பாரத்தை சுமக்கும் காலம் .அழிந்துபோகும் ஆத்துமாக்களை சுமக்கும் காலம்.இரக்கத்தை சுமக்கும் காலம் . நீதியை சுமக்கும் காலம் . கர்த்தருக்காக இழப்பை சுமக்கும் காலம். சுமப்போமா ? ஆலயத் தின் பாரத்தை சுமக்க முன் வாருங்கள்.அது நம்மை பரத்திற்கு சுமந்து செல்லும்.

**"உங்கள் தேவனாகிய கர்த்தர், சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப் போகப் பண்ணினது போல, உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின் தண்ணீருக்கும் செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிப் போகப் பண்ணினார் என்று அறிவிக்கக் கடவீர்கள்"**(யோசுவா 4 : 24). சிவந்த சமுத்திரத்தின் தேவன்தான் யோர்தானுக்கும் தேவனாயிருந்தார்.அதுபோல நெகேமியாவின் முதல் கட்டத்திற்கு *(First Stage)* தேவன்தான் எங்களுடைய இரண்டாம் கட்டத்திற்கும் *(Second Stage)* தேவனாயிருப்பார் என்ற விசுவாசத்தோடு ஆரம்பிக்கிறோம்.

எங்கள் மெய்யான ஒளி குடும்பத்திலே ஒரு குடும்பத்திற்கு ரூ . 10,000 /= என்று நியமி த்திருக்கிறோம் . கொடுத்து வருகிறார்கள்.தங்கள் திராணிக்கு மேலேயும் சிலர் கொடுக்கிறார்கள். இந்த குடும்பத்திலே இணைந்து கொள்ள இருகரம் நீட்டி உங்களையும் அழைக்கிறோம்.அநேகர் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே பணிகளை முடித்து விடலாம் .இந்த பூமியிலே நம்முடைய பயணம் முடியும் முன்பாக அநீதியான உலகப்பொருளால் நமக்கு சிநேகிதரை சம்பாதித்துக் **கொள்ளுவோம், நாம் மாளும்போது நம்மை நித்தியமான வீடுகளிலே அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள்** (லூக்கா 16 : 9) **ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஊக்கமாய் ஜெபிப்போம் .**

**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**

**பாஸ்டர் S. போஸ்கோ .**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**

**& 9283443230 (True Light Ministries)**

**Bank Transfer :**

**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**

**Our Website : www.truelightministry.org**

*17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .*

செய்தி

# எழுப்புதல் என்றால் என்ன ?



**“நான் நீதியின்படி அவனை எழுப்பினேன் அவன் வழிகளையெல்லாம் செவ்வைப்படுத்துவேன் அவன் என் நகரத்தைக்கட்டி, சிறைப்பட்டுப்போன என்னுடையவர்களைக் கிரயமில்லாமலும், பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்”** (ஏசாயா 45: 13).

“**தேவன் எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்**” (ரோமர் 8:30). முன் குறிக்கப்பட்டவர்கள் தேவனால் எழுப்பப்படுகிறான்.எப்படி எழுப்பப்படுகிறான்? அவருடைய நீதியின்படி. கவனியுங்கள்; **எழுப்புதல்** என்ற அந்த நிகழ்வு ஒரு கட்டத்திற்குள் முடிந்துவிடுவதல்ல! ***It has many stages.*** அதற்கு பல கட்டங்கள், வடிவமைப்புகள் உண்டு. அதைத்தான் இந்த செய்தியிலே சுருக்கமாக பார்க்கவிருக்கிறோம்.

## 1.தேவ நீதியின்படி

எழுப்புதல் என்ற வார்த்தை ஆங்கிலத்தில் ***Revival*** என்று அழைக்கப்படுகிறது.

***Bring a person from unconcious to concious.*** அதாவது மயக்கமுற்ற நிலை, அல்லது தூங்குகிற நிலையிலிருந்து அவனை எழுப்புவது, தூங்குவது என்பது ஒரு மனித வாழ்க்கையிலே அவசியமான ஒன்று.ஒரு சரீர பலஹீனத்திலே ஒருவன் மயக்கமுற்று கீழே விழுந்தால் தண்ணீரை தெளித்து மறுபடியும் எழுந்து உட்கார செய்வது, ***It is a usual Custom.*** வழக்கமான , பழக்கமான ஒன்று.இது அவனை புதுப்பித்தல் என்று அர்த்தம் அல்ல.

இந்நாட்களில் எழுப்புதல் என்ற பதம் எதற்கு பயன்படுத்த வேண்டும் என்று தெரியாமலே பயன்படுத்தப்பட்டு வருகிறது. சரியான மனந்திரும்புதலோடு தேவனுடைய நீதியிலே நிலைத்திருப்பவனுக்கு எழுப்புதல் அவசியமில்லை. அவன் ஏற்கனவே தேவனோடு நடந்து கொண்டுதானிருக்கிறான். நீதியின்படி எழும்பி, தேவ நீதிக்கு தலை வணங்குகிறவனுடைய வழிகள் எப்போதும் செவ்வையாயிருக்கும். ஏனெனில் எழுப்பி செவ்வைப்படுத்தினவர் கர்த்தர்.

அப்படியென்றால் தேவனால் எழுப்பப்பட்டவன் மீண்டும் உட்கார்ந்துவிட்டாலோ அல்லது நீதியின் பாதையிலிருந்து வழிவிலகினாலோ அவனுக்கு தேவை புதுப்பித்தல், அல்லது திரும்பவும் உயிர்ப்பித்தல். இதற்கு பெயர்தான்

> ***Bring a person from unconcious to concious.***
> **அதாவது மயக்கமுற்ற நிலை, அல்லது தூங்குகிற நிலையிலிருந்து அவனை எழுப்புவது,**

எழுப்புதல். இன்றைய நாட்களில் எழுப்புதல் என்ற வார்த்தையின் அர்த்தமே ஆவிக்குரிய வட்டாரங்களில், அல்லது சபைகளில் வித்தியாசப்படுகிறது. கொட்டடித்து குதிப்பது ஒரு எழுப்புதல். உற்சாகமாக பாடி உரத்த சத்தத்தில் கூவி ஆடுவது எழுப்புதல் ஆவியின் நிறைவிலே (சொல்லிக் கொள்வது)கீழே விழுந்து உருண்டு போவது எழுப்புதல்.ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டால் அதற்கு பெயர் எழுப்புதல். இப்படி எப்படி எப்படியோ எழுப்புதல். மாறாக தேவனுடைய வசனத்தை ஒரு தனிமனிதனுக்குள் அனுப்பி, அல்லது ஒரு சபை கூடுகையில் சோர்ந்து போனவனை உணர்வடையச் செய்வது எழுப்புதல். நீதியின் வழியை விட்டு விலகிச் செல்கிறவனை தேவனுடைய வார்த்தையினாலே மறுபடியும் நீதியின் பாதைக்குள் அழைத்து வருவது எழுப்புதல். இந்த கிறிஸ்தவ ஜீவிதமே வேண்டாம் என்று முற்றிலும் பின்வாங்கிப் போகிறவர்களை தேவஆவியின் நடத்துதலினாலும், பெலத்தினாலும் ஜீவனுள்ள வார்த்தையைக் கொண்டு மறுபடியும் கிறிஸ்துவுக்குள் ஜீவிக்க ஒருவனை இழுத்து வரும் செயல்தான் எழுப்புதல். ***Called Revival.*** திரும்பவும் உயிர்ப்பித்தல். தேவ நீதியிலே நிலைத்திருப்பவனுக்கு தேவை பெலத்தின் மேல் பெலன்,கிருபையின் மேல் கிருபை, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம்தான்.**எழுப்புதல்** அல்ல. புரிந்து கொள்வோம்.



**இன்றைய நாட் களில் எழுப்புதல் என்ற வார்த்தையின் அர்த்தமே ஆவிக்குரிய வட்டாரங் களில், அல்லது சபைகளில் வித்தியாசப்படுகிறது. கொட்டடித்து குதிப்பது ஒரு எழுப்புதல். உற்சாகமாக பாடி உரத்த சத்தத்தில் கூவி ஆடுவது எழுப்புதல் ஆவியின் நிறைவிலே (சொல்லிக் கொள்வது) கீழே விழுந்து உருண்டு போவது எழுப்புதல்.ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டால் அதற்கு பெயர் எழுப்புதல். இப்படி எப்படி எப்படியோ எழுப்புதல்.**

அதேநேரம், மகா பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்து காட்டினவன்தான் தேவ மனுஷனாகிய எலியா. தேசத்து ராஜாவாகிய ஆகாபின் முன் தைரியமாக "**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் என்று வீர முழக்கமிட்டவன்**" (1இராஜா 17 :1).இன்று ஆகாபின் மனைவியாகிய யேசபேல் என்ற பெண்ணுடைய ஜவடாலுக்கு பயந்து, இஸ்ரவேலின் தேவனுக்கு முன்பாக நின்றவன் இப்பொழுது படுத்துவிட்டான். போதும் , ஆண்டவரே நான் சாக விரும்புகிறேன் என்று அபயமிடுகிறான் காரணம், இஸ்ரவேலின் தேவனை வைக்க வேண்டிய இடத்தில் இந்த யேசபேலை வைத்து விட்டான். தேவையற்ற பயத்தை பிசாசு எலியாவுக்குள் விதைத்துவிட்டான். எந்த தேவ மனிதனுக்கும் ஊழியருக்கும் இந்த பயம் ஏதாவது ஒரு விதத்திலே ஊழியப் பாதையிலே வரும், யாரும் இதற்கு விதிவிலக்கல்ல

கவனியுங்கள்,பயந்து, சோர்ந்து, சாக விரும்புகிறவனுக்கு இப்போது தேவை ஒரு ***Revival.*** திரும்பவும் உயிர்ப்பித்தல்.***Called*** எழுப்புதல்.1இராஜா 19:7 சொல்லுகிறது **கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாம் தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பி: எழுந்திருந்து போஜனம்பண்ணு;நீ பண்ண**

**தேவையற்ற பயத்தை பிசாசு எலியாவுக் குள் விதைத்துவிட்டான். எந்த தேவ மனிதனுக்கும் ஊ ழியருக்கும் இந்த பயம் ஏதாவது ஒரு விதத்திலே ஊழியப் பாதையிலே வரும், யாரும் இதற்கு விதிவிலக்கல்ல**

**வேண்டிய பிரயாணம் வெகு தூரம் என்றான்.** தேவன் தட்டி எழுப்பினார். தேவ திட்டம் சுழல் காற்றுவரை எலியாவில் நிறைவேறிற்று. சூரைச்செடி மரணம் அல்ல, சுழல்காற்றிலே மரணத்தை காணாத எலியாவைத்தான் தேவன் காண விரும்பினார். அந்த தேவனே கண்டார். இதற்கு பெயர்தான் எழுப்புதல். அவனுக்குள் உருவான பயம் தேவநீதியின் பாதையை விட்டு வேறு பாதையிலே ஓட அவனை எத்தனித்தது. அவனுக்கு தேவை ஒரு எழுப்புதல். அதை அவன் அந்நாளிலே சூரைச்செடியின் கீழே பெற்று, தொடர்ந்து தேவ நியமத்தின்படி ஓடினான் தீர்க்கதரிசிகளை அபிஷேகம் பண்ணினான். இராஜாக்களை அபிஷேகம் பண்ணினான் .தனக்குப் பின் வரவேண்டிய ஊழியரை தன் ஸ்தானத்திலே ஏற்படுத்தினான்.தன் ஓட்டத்தை முடித்தான்.தேவனுக்கு பிரியமானவனாய் மாறினான். எழுப்புதல் என்ற வார்த்தையை சரியாக பயன்படுத்த அறிந்து கொள்வோம்.

# 2.வழிகளையெல்லாம் செவ்வைப்படுத்துவேன்



**"எவர்களை முன் குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கி யுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்"** (ரோமர் 8 :30).

தேவன் முன்குறிப்பின்படி அழைக்கப்பட்டு எழுப்பப்பட்டவனை தேவன் ஒருபோதும் கைவிடுவதில்லை. கைவிடுவதில்லை என்பதை விட அவனை நீதியின் பாதையில் கரம் பிடித்து நடத்தி தன் மகிமைக்கு அவனை பாத்திரவானாய் உருவாக்குகிறார் என்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

கவனியுங்கள்,முன்குறித்தல் என்பது பொதுவாக எல்லோருக்கும் தான்......**ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி...** (2பேதுரு 3 :9). இதை அவர் விரும்புகிறார். அழைப்பு என்பது வேறுபடுகிறது. அதில் தெரிந்து கொள்ளுதல் என்பது சிலருக்கே. மத் 22 :14 ன்படி அந்தபடியே **அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்.** அப்படியென்றால் அந்த அழைப்புக்குட்பட்டவர்களை அவர் தம் நீதியின்படி நடத்தி மகிமையின் பாத்திரங்களாய் நிலை நிறுத்துகிறார். ஊழியத்தின் மேல் எல்லோருக்கும் வாஞ்சை. அது அவசியம்.ஆனால் அழைப்பு மிக மிக அவசியம். எல்லோரும் கர்த்தருடைய ஊழியத்தை ஏதாவது ஒரு வகையில் செய்யலாம்.நல்லது.ஆனால் **ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊ ழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை** (எபி 5 : 4)

ஊழியங்கள் இந்த நாட்களில் பிசுபிசுத்து,கச கசத்து போவதற்கு காரணமே அழைப்பின்மையே! **அழைக்கப்பட்டு**

**ஊழியத்தின் மேல் எல்லோருக்கும் வாஞ்சை. அது அவசியம்.ஆனால் அழைப்பு மிக மிக அவசியம். எல்லோரும் கர்த்தருடைய ஊழியத்தை ஏதாவது ஒரு வகையில் செய்யலாம்.நல்லது. ஆனால் ஆரோனைப் போல தேவனால் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான ஊ ழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை**
(எபி 5 : 4)

**செய்வது தேவனுக்கு மகிமை. நுழைக்கப்பட்டு செய்வது தேவனுக்குவெறுமை.** செய்கிறவர்களுக்கு அது குளுமையாக, செழுமையாக இருக்கலாம்! ஆனால் தேவனுடைய பார்வையில்...... சபைகளின் நிலைமையை..... கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் !!

தேவனால் எழுப்பப்பட்டவன்மேல் அவருடைய கண்கள் எப்போதும் நோக்கமாயிருக்கும். அவனுடைய வழிகளை செவ்வைப்படுத்திக் கொண்டேயிருப்பார். பாதம் (வழி) கல்லில் இடறாதபடி அவனைத் தாங்குவார். அப்படியே இடறுவதுபோல் இருந்தாலும் (எலியா) தள்ளிவிட மாட்டார். தூக்கி நிலை நிறுத்துவார்.

தேவனிடத்தில் நீடிய பொறுமையும் இரக்கமும் உண்டு.தம்மிடத்தில் வருகிறவர்களை ஒருபோதும் தள்ளாதவர்.அதேநேரம், **ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும்,தேவனுடைய நல்வார்த்தையையும் இனி வரும் உலகத்திதன் பெலன்களையும் ருசிபார்த்தும் மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனை தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவ மானப்படுத்துகிறபடியால் மனந்திரும்பு வதற்கு ஏதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்**
(எபி 6 : 4 - 6).



## 3.இலவசமாய் பெற்றான் இலவசமாய் கொடுப்பான்

**அவன் என் நகரத்தைக் கட்டி, சிறைப்பட்டுப்போன என்னுடையவர்களைக் கிரயமில்லாமலும், பரிதானமில்லாமலும் விடுதலையாக்குவான் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.** (ஏசா 45 :13).

தேவ நீதியில் எழுப்பப்பட்டு நிலைத்திருப்பவன் தேவராஜ்யத்தை தேவ சித்தத்தின்படி கட்டுவான். சுயராஜ்யத்தைக் குறித்து ஒருபோதும் சிந்திக்கமாட்டான். அவருடைய நகரம் என்பது தேவனுடைய ராஜ்யம். இரட்சகரை அறியக் கூடாதபடி பல வழிகளிலும் மனக்கண்கள் குருடாகிக் கிடப்பவர்களை எந்த பூமிக்குரிய பலனையும் எதிர்பாராமல் அவர்களை அந்தகார இருளிலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு அழைத்துவர அவர்களுக்காக தன் ஜீவனையும் இழப்பான். பரிதானம் விரும்ப மாட்டான்(புகழ்ச்சி)பெயர் பிரஸ்தாபங்களை அறவே வெறுப்பான்.

**தேவ நீதியில் எழுப்பப்பட்டு நிலைத்திருப்பவன் தேவராஜ்யத்தை தேவ சித்தத்தின்படி கட்டுவான். சுயராஜ்யத்தைக் குறித்து ஒருபோதும் சிந்திக்கமாட்டான். அவருடைய நகரம் என்பது தேவனுடைய ராஜ்யம்.**

சுயத்தை காலில் போட்டு மிதிப்பான். **ஆத்துமாக்களுக்காக செலவு பண்ணவும், செலவு பண்ணப்படவும் விரும்பி,** அவர்களுக்காக,அவர்கள் பின்னே ஓடுவான் *(2 கொரி 12 :15).* வெளிப்படையான பாவலா காட்டமாட்டான். உள்ளான மனுஷனிலே பலப்பட்டிருப்பான். சமுதாயத்தை சமாதானத்தின் பாதைக்குள் திருப்ப சமுதாயத்தோடு ஒன்றித்து நடப்பான். முகத்தாட்சணியம் பாராமல் முகத்துக்கு நேராக சத்தியத்தை பேசி சத்தியத்திற்கு சாட்சியாக இருப்பான். யோவான் ஸ்நானகன் ஏரோதை தேசத்தின் தலையென்றும் பாராமல், உள்ளதை உள்ளதென்று சொல்லி தன் தலையையே கொடுத்தது போல....!

**எழுப்புதல் என்பது முதலாவது ஒரு தனி மனிதனுக்குள். புரிந்து கொள்வோம்.** அது சரியாக இருந்துவிட்டால் எழுப்புதல் தீ அவனிலிருந்து பற்றி பிடிக்கும். கிறிஸ்தவம் இந்தியாவில் தோல்விகண்டதேன்? சிலுவையை தோளில் சுமப்பது ஒருபக்கம் இருக்கட்டும், தாளில் இருப்பதை (வேதபுத்தகம்) சரியாக காட்டியிருந்தாலே காரியம் மாறுதலாயிருந்திருக்குமே! சிலுவை உபதேசம் எங்கே போயிற்று? மறைக்கப்பட்டு,மறுக்கப்பட்டு அநேகரால் வெறுக்கப்பட்டே போயிற்றே! மனங்களை குளிப்பாட்டி குளிர வைக்க முயற்சித்து,அநேக ஜனங்களை குழியில் தள்ளிவிட்டார்களே! எத்தனை வேதனை! இதைத்தானே இந்நாட்களில் அதிகமாக பார்க்கிறோம். ஆனாலும் பாகாலுக்கு முன்பாக (சுயம், சுயநீதி, சுயராஜ்யம்) முழங்காலை முடக்காத ஏழாயிரம் பேரால் தேசம் பிழைத்திருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஐயன்மார்களே, இனி காலம் செல்லாது மிகவும் கடைசி நாட்களில் வந்து விட்டோம். நாடகங்களையெல்லாம் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு, கர்த்தரையும் அவருடைய வல்லமையையும் நாடுவோம்... தேடுவோம். ஒருவேளை கர்த்தர் தேசத்தை குணமாக்கலாம்.நம் சிறையிருப்பு மாறட்டும். சிறைப்பட்டுப் போனவகைள் விடுதலையாகட்டும். கிறிஸ்தவத்தின் வழக்கமான பழைய பல்லவிகள் மறைந்து புதுராகம் உருவாகட்டும். சகலமும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக மாறட்டும். தேசத்தில் இரட்சிப்பு மலரட்டும். உண்மையான எழுப்புதலை ***(Revival).*** தேசங்கள் காணட்டும்.

தலையங்கத்தில் எழுதியிருந்தபடி பதினொராம் மணி வேளையில் நடந்து கொண்டிருக்கிறோம். இனியும் காலம் செல்லாது. கர்த்தர் கிருபையாய் நாட்களை நமக்கு கூட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார்.எஜமானிடத்திலே வேலைக்காரன் இந்த வருடமும் இந்த மரம் இருக்கட்டும் கனி கொடாவிட்டால் அடுத்த வருடம் வெட்டிவிடலாம் என்று பரிந்து பேசினதுபோல, குமாரனாகிய கிறிஸ்துவும் நம் பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.அவர் வரும் நாளோ நாழிகையோ பிதாவுக்கு மட்டுமே தெரியுமாதலால் நாம் மிகவும் விழிப்பாயிருப்போம்.

**எழுப்புதல் என்பது முதலாவது ஒரு தனி மனிதனுக்குள். புரிந்துகொள்வோம்.அது சரியாக இருந்துவிட்டால் எழுப்புதல் தீ அவனிலிருந்து பற்றி பிடிக்கும்.கிறிஸ்தவம் இந்தியாவில் தோல்வி கண்டதேன்? சிலுவையை தோளில் சுமப்பது ஒருபக்கம் இருக்கட்டும் தாளில் இருப்பதை (வேதபுத்தகம்) சரியாக காட்டியிருந்தாலே காரியம் மாறுதலாயிருந்திருக்குமே !**

# சிந்தனைக்கு

- நமக்குள் உண்மை இருந்தால் மட்டுமே, மற்றவர்களை உண்மையின் பாதையில் நடத்த முடியும்.
- தேவன் இருக்கிறார் என்று நாம் அறிந்ததை பிறரிடத்தில் காட்டுவது உண்மைக்கு ஆரம்பம்.
- ஆவிக்குரிய முதிர்ச்சியை அடைய உண்மையான வழி, குறுக்கு வழியில் இருந்து விலகி நிற்பதே.
- இன்று நாம் விதைக்கும் உண்மையான விதைகள், நாளை கனிகளை நிர்ணயம் செய்கின்றன.
- உண்மை அறிக்கையே மன்னிப்பெனும் கதவைத் திறப்பதற்குரிய சரியான திறவுகோல்.
- கிறிஸ்துவைப் பற்றி பேசும் தலைவர்களையல்ல,கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றும் தலைவர்களையே பின்பற்றுவோம் .

## திரு குரல்

1.தன் நிலை மறந்து பிறர்நிலை தேடுதலே
கிறிஸ்தவனின் தன்னிகரற்ற விலை.

2.ஊழியப் பெருக்கத்தில் வேண்டும் பணிதல் - அல்லால்
அது சறுக்கலில் கொண்டு விடும்.

3.மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் - தம் ஊழியர்
உயிர் நீப்பர் சத்திய துரோகம் வரின்.

4.பணம் வெட்டுபவர் பின் சென்று ஒரு ஊழியன் வாழ்தல் -
அந்நிலையே கெட்டான் எனப்படும் .

## வானவெடி

கோலியாத்தை வெல்ல தேவையான ஆயுதங்கள் தாவீதுக்கு தேவையற்றவையாகவே இருந்தது.கர்த்தரால் உருவாக்கப்பட்ட அந்த யுத்த வீரனுக்குக் கர்த்தரின் நாமமே போதுமானதாக இருந்தது. இன்றும் பாரம்பரியங்களின் எலும்புக் கூட்டை தூக்கினால்தான் பலருக்கு ஊழியம் வரும்.பல்கலைக் கழகம் பட்டம் பெற்று, அபிஷேக கிரியைகள் நடத்தி, அங்கியால் மூடி,இடைக்கச்சைக் கட்டி, தூக்கி நிறுத்தினால்தான் தேவ ஊழியப் பணி தொடங்கும். மாதச் சம்பளம் குறைந்தால் பலரின் ஊழியம் தானாக நின்றுவிடும். இவர்களுக்கும் கொல்லைப் பொம்மைக்கும் வேறுபாடு இல்லை. தேவன் நம்மை எந்த நிலையில் உருவாக்கினாரோ அந்த நிலையில் எழும்புவோம். அதே நிலையில் நிலைத்திருப்போம்.




கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த மாத இதழிலும் வேதத்திலுள்ள ராகாப் என்ற ஸ்திரீயைக் குறித்து தியானிக்க ஆவியானவர் உதவிச்செய்வாராக.

**இந்த ராகாப் ஒரு வேசி** என்று வேதம் குறிப்பிடுகிறது. ஆனாலும் இவளுடைய பெயர் எபிரெயர் 11ம் அதிகாரத்தில் விசுவாசகளின் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது....!! எப்படி? அருமையானவர்களே, மத்தேயு 21 : 31 ல் நாம் வாசிக்கும்போது தங்கள் பாரம்பரியங்களைக் குறித்தும் சடங்காச்சாரங்களைக் குறித்தும் மேன்மைபாராட்டி தேவனுடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் அசட்டைப் பண்ணின பிரதான ஆசாரியரையும் வேதபாரகரையும் நோக்கி இயேசு சொல்லுகிறார், ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்.

ராகாப் என்ற இந்த ஸ்திரீ ஒரு அந்நிய பெண்ணாக இருந்தாலும் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் குறித்தும் கர்த்தரின் மகத்துவங்களை ,வல்லமையையும் குறித்தும் அறிந்து வைத்திருந்தாள் . இவள் தேவனை விசுவாசித்ததையும், தன் விசுவாசத்தினால் இவள் நடப்பித்த கிரியைகளும் வேதத்தில் எழுதப்பட்டு,இன்றைய நாளளவும் நாம் கற்றுக்கொள்கிற ஒரு பாத்திரமாக விளங்குகிறாள். எபிரெயர் 11:31 சொல்லுகிறது **விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு,கீழ்படியாதவர்களோடே கூடச் சேதமாகாதிருந்தாள்.** அருமையானவர்களே, எந்த மனுஷரும் சமுதாயத்தில் ஒரு உயர்ந்த அந்தஸ்து அல்லது ஒரு நிலையைத்தான் விரும்புவார்கள்..ஆனால் இந்த சகோதரி எந்த சூழ்நிலையில் இப்படிப்பட்ட தொழில் அல்லது நிலையில் தள்ளப்பட்டாள் என்று தெரியவில்லை. ஆனால் வேதம் இவளை ராகாப் என்னும் வேசி என்றே அழைக்கிறது. அருமையானவர்களே,அவர் **சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து, எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும்,மகிமையுள்ளசிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்; ...**(1சாமு 2 : 8). எரிகோ பட்டணத்தின் மனுஷர் எல்லோரும் ஜீவனுள்ள தேவனை அறியாத இருளில் குருட்டாட்டமான அந்தகாரத்தில் விழுந்து கிடந்தாலும்..இவள் மாத்திரம் தேவனைக் குறித்த வெளிச்சத்தை...அறிவைப் பெற்றுக்கொண்டு எழுந்து கொண்டாள்..தன் பழைய வாழ்க்கை நிலையிலிருந்து

**இரட்சிக்கப்பட்டாள்...விடுதலையாக்கப்பட்டாள்..தான் மாத்திரம் அல்லாதபடி தன் முழு குடும்பத்தையுமே எப்படி விடுதலையாக்கினாள் .. என்பதை தொடர்ந்து வரும் பகுதிகளில் தியானிப்போம்.**

அருமையானவர்களே,அநேக நேரங்களில் தேவன் நம்மைக் குறித்தும் வைத்திருக்கிறதான திட்டத்தின்படி...நோக்கத்தின்படி நாம் செல்லக்கூடாதபடி நம்முடைய அநேக பழைய பாவ காரியங்கள் நம்மைத் தடை செய்யும் அல்லது தடுக்கும்.அப்படிப்பட்ட தடைகளை உடைத்து நாம் விசுவாசத்தோடு கர்த்தருக்காக எழும்புவதற்கும்,கிரியைகளை நடப்பித்து,ஜெயம் கொள்வதற்கும் இந்த ராகாபின் வாழ்க்கை நமக்கு சவாலாகவும் ,அநேக காரியங்களை கற்றுக்கொடுக்கக்கூடியதாகவும் இருக்கிறது.

யோசுவா 2 : 1,2ல் **நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிலிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் வேவு பார்க்கும்படி அனுப்பி: நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய்,ராகாப் என்னும் பெயர் கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து,அங்கே தங்கினார்கள். தேசத்தை வேவு பார்க்கும்படி ,இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர் இந்த ராத்திரியிலே இங்கே வந்தார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது.**

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசமாகிய கானானில் போய் சேரும் முன்னே யோசுவா, யோர்தான் நதியின் நிலையையும் அதற்கு மேற்கே இருக்கிற பட்டணமாகிய எரிகோவையும் பார்த்து வரும்படி தன் ஆட்களை அனுப்புகிறான்.அவர்கள் மதிலில் குடியிருக்கிற ராகாபின் வீட்டில் போய் தங்கினார்கள்.அப்பொழுது ராகாப் அவர்களிடத்தில் **கர்த்தர் உங்களுக்கு தேசத்தை ஒப்புக்கொடுத்தாரென்றும்,உங்களைப் பற்றி எங்களுக்கு திகில் பிடித்திருக்கிறதென்றும்,உங்களைக் குறித்து தேசத்து குடிகள் எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன்.**

**நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது: கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப் பண்ணினதையும் , நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம்.** அருமையானவர்களே,இந்த எரிகோ பட்டணம் முழுவதுமே தேவன் செய்த இந்த மகத்தான காரியத்தை அதாவது யாத் 14: 22,27ல் சொல்லப்பட்ட காரியங்களை கேள்விப்பட்டார்கள்.முழு பார்வோன் சேனையையும் தேவன் சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப்போட்டதையும் கேள்விப்பட்டார்கள். வசனம் 11 சொல்லுகிறது கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்து போயிற்று,உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று என்று ராகாப் சொன்னதுடன், ஒரு அருமையான விசுவாச அறிக்கையும் செய்கிறாள்.**உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்.** எவ்வளவு பெரிய விசுவாச அறிக்கை பார்த்தீர்களா..!! **நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை செய்யப்படும்.** ஆம், அருமையானவர்களே, நம்முடைய அறிக்கை எப்படிப்பட்டதாய் இருக்கிறது? தேவனுடைய மகத்துவங்களையும் அற்புதங்களையும் கேள்விப்படும்போதும்.. பெற்றுக்கொள்ளும்போதும் நம்முடைய விசுவாசத்தை தேவன் பேரில் வைக்கிறவர்களாய் காணப்பட வேண்டும்.தேவனுடைய வார்த்தைகளை கேட்க கேட்கத்தான் நமக்குள் விசுவாசம் பெருகும்.

இந்த ராகாப் தேவனை விசுவாசித்ததோடல்லாமல் தன் கிரியைகள் மூலம் விசுவாசத்தை வெளிப்படுத்தவும் செய்தாள்.தொடர்ந்து ராகாப் அந்த வேவுகாரர்களிடம்,**இப்போதும் நான் உங்களுக்கு தயவு செய்தபடியினால்,நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்குத் தயவு செய்வோம் என்று கர்த்தர் பேரில் எனக்கு ஆணையிட்டு ,நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும் என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனை சாவுக்கு தப்புவிக்கும்படி எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்றாள்.**

17,18 வசனத்தில் அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி: இதோ,நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும் போது,நீ இந்த **சிவப்பு நூல்** கயிற்றை எங்களை இறக்கி விட்ட ஜன்னலிலே கட்டி,உன் தகப்பனையும்,உன் தாயையும்,உன்சகோதரர்களையும்,உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக்கொள்.இல்லாவிட்டால் நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்பாய் என்றார்கள். சரியான தருணத்தில் மிகுந்த ஞானமாய் நடந்து கொள்கிறாள். அருமையானவர்களே, யாத் 12ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும்போது வசனம்7ல்**அதின்**

**(ஆட்டுக்குட்டியின்) இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து,தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து...** பஸ்கா பண்டிகையில் கர்த்தருடைய கட்டளையின்படி யாரெல்லாம் தங்கள் வீட்டு நிலைக்கால்களில் இரத்தத்தை பூசினார்களோ, அவர்களுடைய வீட்டில் தலைப்பிள்ளை சாகவில்லை.இந்த காரியத்தில் இஸ்ரேல் மக்கள் மட்டுமல்ல, இதில் அந்நியர்களும், மற்றும் யாரெல்லாம் விசுவாசித்து இரத்தத்தை பூசினார்களோ, எல்லாரும் இஸ்ரவேலர்களுடன் கடந்து வந்தார்கள். அதனால்தான் மோசே வச48,49ல் சொல்லப்பட்டபடி அந்நியரும் விசுவாசத்தினால் விருத்தசேதனம் பண்ணப்பட்டு யூத ஜனங்களோடே தேவனை ஆராதித்தார்கள்.

இதே அடிப்படையில்தான் ராகாபுக்கும் **சிவப்பு நூல்** அடையாளமாக கொடுக்கப்பட்டது. அருமையானவர்களே,நம்முடைய பாவங்களை நீக்கி,சாபத்திலிருந்து நம்மை விடுதலையாக்கும்படிக்கு இயேசுகிறிஸ்துவின் இரத்தம் கல்வாரியிலே சிந்தப்பட்டது .1யோவான் 1:7 சொல்லுகிறது, **இயேசுகிறிஸ்து வின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது.** இங்கேயும் நாம் தொடர்ந்து யோசுவா 6:17ல் வாசிக்கும் போது ஆனாலும் இந்தப்பட்டணமும் இதிலுள்ள யாவும் கர்த்தருக்கு சாபத்தீடாயிருக்கும், நாம் அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்து வைத்தபடியால்,அவளும் அவளோடே வீட்டுக்குள் இருக்கிற **அனைவரும்** உயிரோடிருக்கக்கடவர்கள். ராகாப் மாத்திரமல்ல...அவள் வார்த்தையைக் கேட்டு அவள் வீட்டுக்குள் வந்த யாவரையும்....அடுத்த வசனம் 23ல் வாசிக்கும்போது அப்பொழுது.....அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துக் கொண்டு வந்து, அவர்களை இஸ்ரவேல் பாளையத்துக்குப் புறம்பே இருக்கும்படி பண்ணினார்கள்.இங்கே ராகாப் என்ற வேசி தேவன் பேரில் வைத்த **விசுவாசம்,** அவளை இஸ்ரவேல் பாளையத்துக்கு கொண்டு வந்தது மாத்திரம் அல்ல...வச 6 : 25 சொல்லுகிறது, எரிகோவை வேவு பார்க்க யோசுவா அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்த வைத்தபடியினால்,அவளையும் அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவையும் யோசுவா உயிரோடே வைத்தான். அவள் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிறாள். இதைக்காட்டிலும் அவள் விசுவாசத்துடன் நடப்பித்த கிரியையானது அவளை எங்கே கொண்டு வந்தது தெரியுமா..? இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றின் பட்டியலிலே இடம் பெற்றாள். மத் 1 : 5ல் **சல்மோன் போவாசை ராகாபினிடத்தில் பெற்றான் ; போவாஸ் ஓபேதை ரூத்தினிடத்தில் பெற்றான் ; ஓபேத் ஈசாயைப் பெற்றான்; ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான் ; ...**

அருமையானவர்களே,எபே 2ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டதுபோல, நாமும் ஒருநாளிலே பாவத்தினாலும் அக்கிரமத்தினாலும் மரித்தவர்களாயிருந்தோம்.கிறிஸ்துவை சேராதவர்களாக... இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களாக.....தேவனற்றவர்களுமாக....(ஊமையான விக்கிரகங்களுக்கு முன்பாக மண்டியிட்டுக் கிடந்தோம்) தேவனோ... இரக்கத்தில் ஐசுவரிமுள்ளவராய் நம்மில் அன்பு கூர்ந்து தம்முடைய மிகுந்த அன்பினாலே .....கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே.....கிருபையினலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம்.இது உங்களால் உண்டானதல்ல.இது தேவனுடைய ஈவு.ஒருவரும் மேன்மை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல என்று வேதம் சொல்லுகிறது. ஆம், அருமையானவர்களே,ஒரு விசை தேவனுடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்ட நாம் மரணபரியந்தம் கிருபையை காத்துக்கொள்கிறவர்களாகவும்... பரலோகத்திலே பலன் மிகுதியாகும்படிக்கு நற்கிரியைகளிலே நாளுக்கு நாள் பெருகுகிறவர்களாகவும் காணப்படுவோம்.ராகாப் என்னும் வேசி தன் விசுவாசத்தை கிரியைகளினாலே வெளிப்படுத்தி... மேன்மை யான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டாள்.(யாக் 2 :25)

எபி 11:40 சொல்லுகிறது **அவர்கள் (பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள்)நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார் என்று வாசிக்கிறோம்.** அப்படியானால் நம்முடைய உத்திரவாதமும்..6 பாறுப்பும் எவ்வளவு பெரிதாயிருக்கிறது! என்பதை உணர்ந்து செயல்படுவோம்.கிருபையின் கடைசி மணித்துளிகளுக்குள் வந்துவிட்ட நாம் கர்த்தருக்காக அதிக உற்சாகத்துடன் செயல்படுவோம்.கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்படுவோம் . கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

சகோதரி : **லீமா போஸ்கோ**

# வாசல் படிகள்





நேற்று சந்தித்த
நண்பர் ஒருவர்
அவரது
குடும்ப பிரச்சனைகள் பற்றி
ஆவலாதிகள் அடுக்கினார்

வீட்டுக்கு வீடு
வாசல்படி என்றேன்
எனக்குள் கவிதை ஒழுகியது

சில வாசல் படிகள்
உயரமாக இருக்கும்
அதை தாண்டுவது
சிரமமாக இருக்கும்

சில வாசல் படிகள்
சிறியதாக இருக்கும்
ஆனால்
அதில்
தடுக்கி விழுவதும் உண்டு

சில வாசல் படிகளை சுற்றி தேக்கு
கட்டைகளால்
பக்கச் சுவர்
அமைக்கப்பட்டிருக்கும்
அதில் பிடித்துக்கொண்டு
வாசல் படிகளை கடந்து விடலாம்

அதுபோல
இயேசுகிறிஸ்துவின்
கரத்தைப் பிடித்தவர்கள்
பிரச்சனைகளை
சுலபமாக கடந்து விடுவார்கள்

சிலரது
வீட்டு வாசல்கள்
தெருவுக்கு தெரியாதபடி
சுற்றுச் சுவர் அமைத்து
மறைக்கப்பட்டிருக்கும்




குடிசை வீடுகளிலும்
வாசல் படிகள் உண்டு- அது
சாணியால்
பூசி மெழுகப்பட்டிருக்கும்
பணம் படைத்த வீடுகளில்
பளிங்கு கற்கள்
பதியப்பட்டு இருக்கும்

எல்லா வாசல் படிகளையும்
காலணிகள் ஆதிக்கம் செய்யும்

மிதித்து கடந்து போவதற்குத்தான்
வாசல்படிகள்
அமைக்கப்படுகின்றன
பிரச்சனைகளும்
கடந்து போவதற்குத்தான்


வாசல் படிகள்
இல்லாத வீடுகள்
அழகாக இருப்பதில்லை

நானே வாசல் என்றார் இயேசு
அந்த வாசல் வழியாய்
நமது வீட்டுக்குள் பிரவேசிப்போம்
உள்ளும் புறம்பும் சென்று
மேய்ச்சலை கண்டடைவோம்

அது சரி.
உங்கள் வீட்டு வாசல்படி
எப்படி இருக்கிறது ....?

அல்பா என். ஆசைத்தம்பி (ஆவடி 9841166883 ).

# இன்றைய இஸ்ரேல் தேசத்தின் முந்தைய வரலாறு



பரிசுத்த வேதாகமத்தில் நாடுகள் குறிப்பிட்டிருக்கும்போது, அவைகளுக்கும் இஸ்ரேல் நாட்டிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கும். இஸ்ரேல் ஜனங்களுக்கு தாம் கொடுத்த வாக்குத் தத்தம் நிறைவேற அந்நிய அரசர்களை அல்லது நாடுகளை ஆண்டவர் பயன்படுத்தி வருகிறார் என்பதை பரிசுத்த வேதாகமம் வாயிலாக வும்,முதலாம் இரண்டாம் உலக மகா யுத்தங்களின் வாயிலாகவும் அறிகிறோம்.உதாரணமாக வடக்கு பத்து கோத்திரங்களைத் தண்டிக்க அசீரீய மன்னன் 5 ஆம் சல்மனாசாரை ஆண்டவர் பயன்படுத்தினார். அதைப்போல இஸ்ரவேலின் தெற்கு இரண்டு கோத்திரங்களைத் தண்டிக்க ஆண்டவர் பாபிலோனிய மன்னன் **நெபுகாத்நேச்சாரைப்** பயன்படுத்தினார்.

இஸ்ரேல் நாடு உருவாகி இன்றைய நிலைக்கு வந்து சேருவதற்கு இரண்டு உலக மகா யுத்தங்கள் தேவைப்பட்டன.என்றாலும்,ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்கு பண்ணியதில் மூன்றில் ஒரு பங்கு கூட இன்னும் யூதர் கைக்கு வந்து சேரவில்லை.கி.பி.1990 ம் ஆண்டு இராக்குக்கும் குவைத்துக்கும் நடந்த யுத்தத்தில் இராக்கின் அதிபதி **சதாம் ஹீசேன்** இஸ்ரேல் நாட்டை அந்த யுத்தத்தில் ஈடுபடுத்தி அரபு முஸ்லிம் அரசுகளின் ஆதரவை திரட்டவும்,இஸ்ரேல் நாட்டை அழிக்கவும் திட்டம் போட்டார்.அச்சமயத்தில் சில வேத அறிஞர்கள் அந்த யுத்தத்தின் மூலம் ஆபிரகாமக்கு ஆண்டவர் வாக்கு ததத்தம் பண்ணிய பூமி இஸ்ரேல் நாட்டுக்கு கிடைக்குமோ என்றும் எண்ணினார்.ஆனால் அவர்களுடைய எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணிய நிலப்பரப்பைக் கவனிப்போம்.

ஆதியாகமம் 15 : 18 - 21 (கி.மு.1913)

18.அந்நாளிலே கர்த்தர் ஆபிரகாமோடே உடன்படிக்கை பண்ணி,எகிப்தின் நதி துவங்கி ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ளதும்,

19.கேனியனும்,கெனிசியரும், கத்மோனியரும்,

20.ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும்

21.எமோரியரும்,கானானியரும்,கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றான். இந்நிலப்பரப்பைக் கவனித்துப் பார்த்தால் தாவீது, சாலொமோன் அரசர்கள் ஆண்ட நிலப்பகுதியைக் காட்டிலும் அதிகமான பகுதிகளடங்கும்.அல்லது தற்கால தேசங்களின் பிரிவுப்படி இஸ்ரேலுக்கு ஐக்கிய நாடுகள் சபை 1947 ஆம் ஆண்டு பிரித்துக் கொடுக்க உத்தேசித்த நிலப்பரப்பைவிட இன்னும் கீழ்க்கண்ட நிலப்பரப்பு இஸ்ரேல் நாட்டுக்குக் கிடைக்க வேண்டும்.

1.சீனாய் தீபகற்பத்தில் எகிப்து நதி என்ற ஆற்றிலிருந்து கிழக்கேயும் வடக்கேயும் உள்ள நிலப்பரப்பு,இப்பகுதி 1967 ஆண்டு ஆண்டவரால் இஸ்ரேலுக்கு கொடுக்கப்பட்டது என்றாலும் 1982 ஆம் ஆண்டு காம்ப் டேவிட் உடன்படிக்கையின்படி எகிப்துக்கு இஸ்ரேல் பகுதியை திருப்பிக் கொடுத்து விட்டது.(சில வேத ஆராய்ச்சியாளர்கள் எகிப்து நதி என்பது எகிப்தில் ஓடும் நீல நதி, அதற்கு கிழக்கேயுள்ள பிரதேசம் முழுவதும் ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குப் பண்ணிய பூமி என்று கூறுகின்றனர்).

2 . காசா பகுதி .

3.மேற்குக் கரை பகுதி ( யூதேயா, சமாரியா) இந்த இரு பகுதிகளும் 1967 ஆம் ஆண்டு யுத்தத்தில் இஸ்ரவேலின் கைக்கு வந்தன.இப்பகுதிகளில் அநேக புது யூதக் குடியேற்றங்களை இஸ்ரேல் நிர்மாணித்து யூதரை அங்கு குடியேற்றியது.ஆனால் 1987 ஆம் ஆண்டு முதல் அங்கு வசிக்கும் அரபிய முஸ்லிம்கள் வன்முறையில் இஸ்ரேல் நாட்டுக்கு விரோதமாக கலகத்தில் ஈடுபட்டபடியால்,அவர்களை சமாளிக்க இஸ்ரேல் நாட்டு பிரதமர் இட்சாக் ரபீன் என்பவர் அல்பத்தா என்ற பலஸ்தீனிய முஸ்லிம் தீவிரவாதிகளுடன் சமாதான ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் நடத்தி காசா பகுதியை முழுவதும்

பாலஸ்தீனிய தீவிரவாதிகளுக்கு தாரை வார்த்தும், மேற்குகரை பகுதியில் எரிகோவைச் சுற்றியுள்ள சிறு பாகத்தை முதலாவது அவர்கள் கையில் கொடுத்தும், பின்னர் படிப்படியாய் ஐந்து ஆண்டுகளில் முழு மேற்கு கரைப்பகுதியையும் அவர்களுக்குக் கொடுத்து விடுவது என்ற ஒப்பந்தம் பண்ணினார். இதைச் சகிக்காத ஒரு வைதீக யூத வாலிபன்,யீகர் அமீர்,1995 நவம்பர் மாதம் 5ம் தேதி டெல் அவீவ் நகரில் ஒரு சமாதான பொதுக்கூட்டம் நடத்தி முடித்து வரும்போது அவரைச் சுட்டுக் கொன்று விட்டான். ஆனால் அவருக்குப் பின் அவருடைய அயல் நாட்டு மந்திரிஅந்த பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து நடத்திக் கொண்டு வந்தார்.

4.ரெப்பாயீமர் குடியிருந்த நாடு – இது தற்கால யோர்தான் நாட்டின் மேற்குப் பகுதி.

5.எமோரியர் குடியிருந்த நாடு – இது தற்கால யோர்தான் நாட்டின் வடபகுதியும்,சீரியா நாட்டின் தென் பகுதியுமாகும்.இப்பகுதிகள் இரண்டும் யோர்தான் நதிக்குக் கிழக்கே கீலேயாத் பாசான் என்று அழைக்கப்பட்ட பகுதிகள். இவைகள் மோசேயினால் காத் கோத்திரத்துக்கும்,மனாசே பாதி கோத்திரத்துக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டவை. யோர்தான்நதிக்கு கிழக்கு பக்கத்தில் அமைந்த நாடுகள் . 1922ம் ஆண்டு ஆங்கிலேயரால் டிரான்ஸ் ஜோர்டான் என்று பெயரிடப்பட்டு அரபி நாடோடிகளின் தலைவன் அப்துல்லாவுக்கு அளிக்கப்பட்டது.

6.ஏத்தியர் நாடு – இப்பிரதேசம் தற்கால சீரியா நாட்டில் அடங்கும்.

7.ஐப்பிராத்து நதி வரை – சில வேத ஆராய்ச்சியாளர் சீரியா நாட்டின் ஒரு பகுதியும்,இராக் நாட்டின் ஒரு பிரதேசமும் இதில் அடங்கும் என்று கருதுகின்றனர். சாலேம் கிர்பான் என்ற அரபிய கிறிஸ்தவ வேதாகம தீர்க்கதரிசன விரிவுரையாளர் தெற்கே சீனாய் பாலைவனத்திலிருக்கும் எகிப்து நதி துவக்கி நேர் கிழக்கே ஐப்பிராத்து நதி மட்டும்,850 மைல் அகலம் இஸ்ரவேலின் தெற்கு எல்லையாகவும்,வடக்கே ஹாமாத் என்ற நகரை எல்லையாக வைத்து மத்திய தரைக்கடல்,கிழக்கே ஐப்பிராத்து நதி. இந்த எல்லைகளுக்குட்பட்ட நாடு முழுவதும் என்று கருதுகிறார்.இதற்கு இவர் கொடுக்கும் ஆதாரம் எண்ணாகமம் 13 : 21 ம்,எண்ணாகமம் 34: 1– 15 வசனங்களும் .

இதைத்தொடர்ந்து பார்க்கும் பொழுது, யூத வரலாற்றின் தொடர்ச்சியில் இந்திய யூதர்கள் என்றும் பார்க்கிறோம்.யூதர் முதல் முதல் எப்பொழுது இந்தியாவில் வந்து குடியேறினார்கள் என்பதற்கு எழுத்து வடிவத்தில் ஆதாரப்பூர்வமான சரித்திரம் இதுவரை கிடைக்கவில்லை.இந்தியாவில் பல பல காலங்களில் வந்து குடியேறிய யூதர் ஆறு வித்தியாசமான இந்திய கலாச்சாரங்களின் மத்தியில் குடியிருந்தது, குடியிருப்பது தெரியவருகிறது. அவர்கள் குடியேடிறிய பிரதேசங்களிள் மொழிகளை நாளாவட்டத்தில் ஏற்றுக்கொண்டபடியால், தங்கள் தாய் மொழியாகிய எபிரெய மொழியை மறந்தவர்களாக காணப்பட்டனர். கொச்சி சமஸ்தானத்தில் குடியேறியவர்கள் மலையாள மொழியையும், மகாராஷ்டிர மாநிலத்தில் குடியேறியவர்கள் மராட்டி மொழியையும் அஸ்ஸாம், மிசோராம் பிரதேசத்தில் குடிபுகுந்தவர்கள் அந்தந்த பிரதேச மொழிகளையும் பேசி வந்தனர்.இந்த மாறுதல் ஏற்படுவது சில ஆயிரம் ஆண்டுகளாயிருக்க வேண்டும் என்றாலும் அவர்கள் தங்கள் யூத பண்பாட்டையும்,கலாச்சாரத்தையும் மதக்கோட்பாட்டுகளையும் கைவிடாமல் பின்பற்றி வந்தபடியால் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் வைதீக யூத ரபிமார் அவர்கள் வாழ்க்கைமுறை, மதக் கோட்பாடுகளை அனுசரிக்கும் முறை, யூத புனித நாட்களையும், ஓய்வு நாட்களையும் அனுசரிக்கும்முறை, தீட்டு சாப்பாட்டில் யூத முறையை கடைபிடித்தல் முதலியவைகளைக் கவனித்துப் பார்த்தால், அவர்கள் சிதறடிக்கப்பட்ட அல்லது சிதறிப்போன யூதர்தான் என்று ஏற்றுகொள்ளப்பட்டவர்களில் அநேகர் கி.பி.1948 ஆம் ஆண்டு பிரகடனப்படுதப்பட்ட இஸ்ரேல் நாட்டில் குடியேறியுமிருக்கின்றனர்.

இந்தியாவில் குடியேறிய ஆறு வகையான யூதரைப் பற்றி கீழே காண்போம் .

கேரள மாநிலம்,கொச்சின் நகரத்தில் மட்டாஞ்சேரி என்ற பகுதியில் வசிக்கும் யூதர். இவர்கள் இப்பகுதிக்கு அல்லது தென் இந்தியாவின் மேற்கு கரைப்பகுதிக்கு அல்லது மலபார் பகுதிக்கு

எப்போது வந்து சேர்ந்தார்கள் என்பது திட்ட மாகத் தெரியவில்லை.ஆனால் கீழ்க்கண்ட அபிப்பிராயங்கள் சரித்திர ஆசிரியர்களால் கூறப்படுகின்றன.

முதலாவது : சாலொமோன் அரசனின் காலத்திலேயே அதாவது கி.மு.971 முதல் கி.மு.931 ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்கும் இஸ்ரேல் நாட்டுக்கும் வர்த்தகம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. இந்தியாவி லிருந்து மயில்,குரங்கு,வாசனை திரவியங் கள் முதலியன இஸ்ரேல் நாட்டிற்குக் கொண்டு போகப்பட்டன. அக்காலத்திலே யூதர் குடும்பத் துடன் இங்கு வந்து தங்கி,சாலொமோன் அரசுக்கு வேண்டிய பண்டங்களைச் சவதரித்து, யூத வர்த்தகர் மூலமாக அனுப்பிக் கொண்டிருந்தனர்..இதற்கு ஆதாரமாக சில தமிழ் வார்த்தைகளே எபிரேய மொழியிலும் வழங்கலாயிற்று. மயிலுக்குத் தமிழில் தோகை என்ற பெயரும் உண்டு.இதை எபிரேய மொழியில் துகி என்று அழைத்தனர்.இப்படி அநேக தமிழ் வார்ததைகள் எபிரேய மொழிக்கு மருவிப் போயிருக்கின்றனவென்று மொழி ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

இரண்டாவது, கி.மு.722ஆம் ஆண்டு அசீரிய அரசன் சல்மனாசார் இஸ்ரேல் நாட்டின் வடக்கு பத்துக் கோத்திரத்தில் அநேகரை சிறைபிடித்துக் கொண்டுபோய் அசீரீயாவில் குடியேற்றி னான். சில காலத்துக்குப்பின் அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதன்பின் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.அவர்கள் காணாமல் போன பத்து கோத்திரத்தார் என்று அழைக்கப்படுகிறார்கள்.அவர்களில் ஒரு சாரார் கப்பல்களில் மலபார் பகுதியில் வந்திறங்கி கிராங்கனூரில்(தற்கால பெயர் கொடுங்கலூர்) குடியேறியிருக்க வேண்டு மென்று கருதுகின்றனர்.

மூன்றாவதாக,கி.மு.586 ஆம் ஆண்டு நேபுகாத்நேச்சார் யூதா,பென்யமின் ஆகிய இரண்டு கோத்திரத்தாரை பாபிலோனுக்கு சிறைபிடித்துக் கொண்டு போனான். 70 ஆண்டுகளுக்குப்பின் பெரிசிய அரசன் கோரேசினால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களில் பலர் யூதேயாவுக்கு திரும்பி போயினர்.பலர் பாபிலோனிலேயே தங்கி விட்டனர்.அவர்களில் சிலர் கப்பல்கள் மூலமாக மலபார் பகுதியில் வந்திறங்கி இங்கு குடியேறியிருக்க வேண்டும்.

நான்காவதாக,கி.பி. 70 ம் ஆண்டுரோம தளபதி தீத்து வெஸ்பேஸியனால் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டு, லட்சக்கணக் கான யூதர்கள் கொலை செய்யப்பட்டும், அடிமைகளாக விற்கப்பட்டும், அநேகர் நாட்டைவிட்டு துரத்தப்பட்டும் போயினர்.

அச்சமயத்தில் தோராயமாக 10,000 யூதர் மலபார்,கொச்சின் கடற்கரை ஊர்களில் வந்து தஞ்சம் புகுந்து குடியேறினர்.இவ் விதமாக, கிராங்கனூர், பண்டாரினி, எலிமலா, கள்ளிக் கோட்டை, காஞ்சரக்கரா, குய்லான் முதலிய நகரங்களிலும் அவை களின் சுற்றுப்புறங்களிலும் யூத குடியேற்றங்கள் ஏற்பட்டன.

இப்படியாக, யூதர்களுக்கென்று ஒரு பெரிய வரலாறு , சரித்திரம் உண்டு.காரணம் இந்த யூத இனம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டது.




## கவனியுங்கள்

கடந்த மாதம் 18 பேர் எழுதியதில் 17 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள். நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப்பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

### வேத பகுதி

## உபாகமம் 10 முதல் 14 வரை

1.முன் எழுதியிருந்த பிரகாரம் என்று குறிப்பிடப்படுவது எது ?

2.உங்களால் உண்டாகும் பயமும் கெடியும் என்று கர்த்தர் யாருக்கு வாக்குத்தத்தம் கொடுக்கிறார்?

3.பன்றி ஏன் புசிக்கலாகாது ?

4.எதிலே ஒன்றையும் கூட்டவும் வேண்டாம் ஒன்றையும் குறைக்கவும் வேண்டாம் என்று கரத்தர் சொல்லுகிறார்?

5.புசிக்கக் கூடாத இரத்தம் என்ன செய்யப் பட வேண்டும் ?

6.முன்மாரி பின் மார் - அதிகாரம், வசனம் குறிப்பிடுக.

7.கொள்ளையிட்ட பொருட்களெல்லாம் என்ன செய்யப்பட வேண்டும் ?

8.இஸ்ரவேலர் நீடித்து வாழ என்ன செய்ய வேண்டும்?

9.கற்பலகைகள், வைக்கப்பட்ட பெட்டி எந்த மரத்தினால் செய்யப்பட்டது ?

10. ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டதில் எவை யெல்லாம் புசிக்கலாம்?

### கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1.எலிசபெத் சாலொமோன் (கன்னிகாபுரம்).

2. Dr. இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).

3.ஜாய் ஜோஷ்வா (சேலம்).

4.செல்வம் ஜெயராஜ் (பிலாய்).

5.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர்).

6.ஜெயஜோதி (திருமுல்லைவாயில் ).

7.எட்வினா (கோயில்பதாகை ).

8.ரெஜினா பாண்டியன் (அம்பத்தூர் ).

9.ரம்யா லிவிங்ஸ்டன் (போரூர்).

10.இவான்ஜலின் ஜெயபால் (காட்பாடி).

11.லீலா ஜெயபால் (காமராஜ் நகர்).

12.கீதா தினேஷ் (பொத்தூர் ).

13.ஹெப்சி கிரி (காமராஜ் நகர்).

14.மகா (திருவள்ளூர் ).

15.மதுமிதா (வெள்ளானூர்).

16.காவியா (வெள்ளானூர்).

17.ஜெப பிரிசில்லா (வெள்ளானூர்)

பரிசு பெற்றவர் :

**ஜெப பிரிசில்லா** ( வெள்ளானூர் )

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 11 - 2023.**